(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 2(6).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 செப்தெம்பர் 08 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2023 செப்தெம்பர் 19, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளினதும் கலந்தாலோசனையுடன், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 02 ஆம் திகதிய 2334/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24(1) (ஏ),(ட) மற்றும் (ண) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 64(2)(ஊ) ஆம் பிரிவு, 23அ, 23ஆ, 23இ, 23ஈ மற்றும் 28(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 64(1) ஆம் பிரிவு, 24(1) ஆம் பிரிவு, 3அ ஆம் பிரிவின் (3), (4), (5) மற்றும் 6 ஆம் மற்றும் 64 ஆம் பிரிவுகள், 3(4) ஆம் பிரிவு மற்றும் 64 ஆம் பிரிவு மற்றும் 58 ஆம் மற்றும் 59 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 64 ஆம் பிரிவின் கீழ், வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய 2346/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1995 ஆம் ஆண்டுக்கான 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 4(1)(ஊ) ஆம் பிரிவின் கீழ், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2294/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2023 செப்தெம்பர் 22, வெள்ளிக்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2023 ஒக்தோபர் 03, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1463/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் நிறைவேற்றுத் தர ஊழியர்களின் எண்ணிக்கை, கனிஷ்ட தர ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) நிறைவேற்றுத் தர ஊழியர்கள் மற்றும் கனிஷ்ட தர ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள்;

(iii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் வருடாந்த வருமானம்;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1510/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பகிரங்க அரங்காட்டுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் பதவி தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, அந்தச் சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அங்கீகாரம் வழங்குவதற்காக இன்றளவில் எஞ்சியுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அத்திரைப்படங்களுக்கு அங்கீகாரம் வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1548/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த சீட் இறப்பர் உற்பத்தி யாதென்பதையும்;

(ii) மேற்படி உற்பத்தியில் உள்நாட்டுப் பாவனைக்காக பயன்படுத்தப்படும் அளவும் ஏற்றுமதி செய்யப்படும் அளவும் சதவிகித அடிப்படையில் யாதென்பதையும்;

(iii) சீட் இறப்பர் ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1583/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள இரத்தினக் கற்களின் அளவு கேரட்களின் அடிப்படையில் யாது என்பதையும்;

(ii) அவற்றை ஏற்றுமதி செய்துள்ள ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இரத்தினக் கல் ஏற்றுமதியினால் ஈட்டப்பெற்ற வருமானம் ஒவ்வோராண்டு வாரியாக தனித் தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த வருமானம் நாட்டுக்கு முழுமையாக கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு வேறு நாடுகளிலிருந்து இரத்தினக் கற்கள் இறக்குமதி செய்யப்பட்டு, அவை மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய இரத்தினக் கற்களின் வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1621/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 மே 07ஆந் திகதிய අමප/20/0722/218/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுக்கு துரித கடன் உதவிகளை வழங்குவதற்காக 2020ஆம் ஆண்டில் கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதை அறிவாரா;

(ii) மேற்குறிப்பிட்ட அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் அளவுகோலுக்கு அமைய, 2020 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்துக்கு கூட்டுறவு ஆணையாளரால் விதப்புரை செய்யப்பட்டிருந்த ரூ.10,000,000/- கடன் எல்லையை விஞ்சி ரூ.70,000,000/- கடன் தொகையை வழங்கியமைக்கான காரணங்கள் யாவை;

(iii) விதப்புரை செய்யப்பட்ட கடன் எல்லையை விஞ்சி கடன் வழங்கியுள்ளமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1641/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வூழியர்களின் எண்ணிக்கையானது நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்கள் எனும் அடிப்படையில் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களுக்குச் செலுத்தப்படும் வருடாந்த காப்புறுதியின் பெறுமதி யாதென்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி காப்புறுதியைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த காப்புறுதி நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1681/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களுக்கு நீர்வழங்கல் சபையினால் வழங்கப்படும் குடிநீரானது, கற்பாறைகளை அண்டியதாக பெறப்படும் நிலத்தடி நீர் என்பதால் சுகாதாரத்திற்கு தீங்கானது என்பதையும்;

(ii) கடந்த காலங்களில் நீர் வழங்கல் சபையினால் கல்லாறு நீர்த்தேக்க குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், இதுவரை அத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கல்லாறு நீர்த்தேக்க குடிநீர்த் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றெல், ஏன்?

1761/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள —

(i) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமானதும் இதுவரை பயன்படுத்தப் படாததுமான காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அத்திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் ஆவணமொன்று பேணப்படுகின்றதா என்பதையும்;

(iii) திணைக்களத்தின் காணிகள் இன்றளவில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது சரியான முறையியல் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருடாந்தம் ஈட்டப்படுகின்ற குத்தகை வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1803/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிநீர் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தின் கீழும் உள்வாங்கப்பட்டுள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நீர்க் கருத்திட்டத்திலும் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேலைகளின் அளவு சதவீதத்தில் தனித்தனியே யாது என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நீர்க் கருத்திட்டத்தினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்படவுள்ள திகதி தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2395/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரிவெனாக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களில் தற்போது சேவையாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) பிரிவெனாக்களுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது கருத்திற் கொள்ளப்படும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) தற்போது பிரிவெனாக் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) பிரிவெனாக் கல்வியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 ஒக்தோபர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1816/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அவசர மின் கொள்வனவுகளுக்காக இலங்கை மின்சார சபை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பங்களுள் அனுமதி அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையும் அனுமதி அளிக்கப்படாத சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையும் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அவசர மின் கொள்வனவுகளுக்கு அனுமதி வழங்கப்படாமையின் காரணமாக இலங்கை மின்சார சபைக்குக் கிடைத்த நிதிரீதியான இலாபம் எவ்வளவென்பதையும்;

(iv) அவசர மின் கொள்வனவுகளைத் தவிர்ப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2534/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவின் நிலாவெளி, குச்சவெளி மற்றும் புல்மோட்டை போன்ற பிரதேசங்கள் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் பிரதேசங்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்திடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2578/2023

கௌரவ டீ. வீரசிங்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்திலுள்ள வாவிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வாவியினதும் நீர்க் கொள்ளளவு தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி வாவிகளில் புனரமைப்புச் செய்வதற்காக இனங்காணப்பட்டுள்ள வாவிகள் யாவை என்பதையும்;

(iv) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2622/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2694/2023

கௌரவ கே. பி. எஸ். குமாரசிறி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் பிரதான தபால் அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ள கட்டிடம் இன்றளவில் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) அதன் காரணமாக பாவனையாளர்களினதும் ஊழியர்களினதும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை புனரமைக்காமல் அது அமைந்துள்ள தபால் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியை வீடமைப்புக் கருத்திட்டமொன்றுக்காக தனியார் கம்பனியொன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மெற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்கென இன்றளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iii) காணி மற்றும் கட்டிடத்தின் உரித்தினை தபால் திணைக்களத்திடம் வைத்துக்கொண்டு குறித்த காணியில் மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இன்றளவில் நட்டத்தில் இயங்கும் தபால் திணைக்களத்தை இலாபமீட்டும் நிலைக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இன்றைய சமூக மற்றும் சந்தை தேவைப்பாடுகளுக்கு ஏற்றவாறு தபால் திணைக்களத்தை நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2847/2023

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புள்ளையில் நிர்மாணிக்கப்படும் உணவுப் பாதுகாப்பு நிலையத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்படும் தொகை யாதென்பதையும்;

(iii) இந்நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த நிலையத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2936/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில், அம்பகெலே பிரதேசத்தில் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் சொந்தமான மரபணு வள நிலையமொன்று இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அந்நிலையத்தில் உள்ள பால் தரக்கூடிய பசுக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி பசுக்களிடமிருந்து பால் கறக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிலையத்தின் பால் வருமானம் முறையாக கணக்கு வைக்கப்படவில்லை என்பது தொடர்பில் கணக்காய்வு வினவல்கள் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2973/2023

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 200 மாணவர்களை விட குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 ஒக்தோபர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3079/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் —

(i) இலங்கை போக்குவரத்துச் சபை பெற்றுள்ள தொழிற்பாட்டு இலாபம்/நட்டம்;

(ii) சபையினால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ள பங்களிப்புத் தொகை;

ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3097/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.நிலந்த ஜயவர்தன தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(ii) அவர் பொலிஸ் நிர்வாகப் பிரிவின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி, மேற்படி பதவிக்கு அவர் பரிந்துரை செய்யப்பட்ட திகதி மற்றும் குறித்த பதவிக்கு அவரைப் பரிந்துரை செய்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்படி உத்தியோகத்தரை குறித்த பதவிக்கு நியமிப்பதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனம் தொடர்பில் மீண்டும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3109/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் இன்றளவில் இருக்கின்ற குதிரைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி தீவிற்கு முதற் தடவையாக குதிரைகள் கொண்டுவரப்பட்ட வருடம் யாது;

(iii) மேற்படி குதிரைகளுக்கு வழங்கப்படுகின்ற உணவு வகைகள் யாவை;

(iv) மேற்படி குதிரைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை எத்தனை;

(v) மேற்படி குதிரைகளைக் கவனிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகமொன்று நெடுந்தீவில் நிறுவப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், அதற்கான காரணம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3233/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மந்திகளை சீனாவிலுள்ள மிருகக்காட்சிச்சாலைகளுக்கு வழங்குமாறு கமத்தொழில் அமைச்சிடம் சீனா வேண்டுகோள் முன்வைத்துள்ளதா என்பதையும்;

(ii) அதற்கமைவாக, அம்மந்திகளை சீனாவுக்கு அனுப்புவதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மந்திகளை சீனாவுக்கு அனுப்புவதன் ஊடாக ஈட்டக்கூடிய வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மந்திகளினால் ஏற்படுத்தப்படும் பயிர்ச் சேதங்களைக் குறைப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3322/2023

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு, — (2)

(அ) (i) 2019 முதல் 2023 வரையான காலப்பகுதிக்காக பட்டப்பின் கல்வி நிறுவகங்களுக்கென ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகளையும்;

(ii) மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டில் இருந்து மூலதனச் செலவினத்திற்காகவும் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட நிறுவகங்களின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணி மற்றும் கல்விசாராப் பதவியணிகளையும்;

(iv) மேற்குறிப்பிட்ட நிறுவகங்களின் கல்விசார் பதவியணி மற்றும் கல்விசாராப் பதவியணிகளில் தற்போது நிலவும் வெற்றிடங்களையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3352/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டங்களைச் சார்ந்ததாக வாழும் மக்கள் புதிய பிறப்பினை உரிய முறையில் பதிவு செய்யாமை காரணமாக அப்பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் போது பாரிய அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) நிரந்தர முகவரி இல்லாத காரணத்தால் இம் மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ள சிரமங்களுக்கு தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) பிறப்புச் சான்றிதழைப் பெறுவதன் முக்கியத்துவம் மற்றும் அவசியம் குறித்து மேற்படி மக்களுக்கு அவர்களின் தாய்மொழியில் விழிப்புணர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3356/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளின் அளவு;

(ii) குறித்த காணிகளுள் இன்றளவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(iii) மேற்படி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளுள் குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

ஒவ்வொரு மகாவலி வலயம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்கமைவாக தனித்தனியாக ஹெக்டேயர்களில் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மகாவலி வலயங்களில் இன்றளவில் குடியிருக்கும் ஒரு குடும்ப அலகிற்கு வழங்கப்பட்டுள்ள மேட்டு நிலங்கள் மற்றும் சேற்று நிலங்களின் அளவு தனித்தனியாக ஹெக்டேயர்களில் எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3364/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்கள் பேணிவரப்படுகின்ற கட்டிடங்கள் பல வருட காலம் பழைமைவாய்ந்தவை என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களின் விடுதிகளைப் பயன்படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடங்களை நவீனமயப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களிலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகைதருகின்ற பொது மக்களுக்கு முறையான சேவையை வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3475/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திஹகொட, நாயிம்பல “நந்தசிறி” இல்லத்தில் வசிக்கும் திரு. ஜே.கே.ஏ. குணபால என்பவர் மாத்தறை, திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள “மிதெல்ல கும்புற” என அறியப்படுகின்ற வயற் காணியின் குத்தகை விவசாயியாக நீண்ட காலம் கமத்தொழிலில் ஈடுபட்டு வருவதால், இவர் மேற்படி வயற் காணிக்கு காணி உறுதியைப் பெற்றுக்கொள்ளத் தேவையான சகல ஆவணங்களையும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளபோதும், இதுவரை அந்தக் காணி உறுதி வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் காணி உறுதியை வழங்குவதற்காக திரு.குணபால என்பவருக்குப் பிரதிகொண்டதாக அனுப்பியுள்ள, 2013.04.26ஆந் திகதிய மற்றும் 15/6/168/மா/1-111ஆம் இலக்க கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையிலும், இதுவரை அந்த வயற் காணிக்கான உறுதி வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிக்கு உறுதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3482/2023

கௌரவ வேலு குமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கண்டி மாவட்டத்தில் தேசியப் பாடசாலைகளாக உள்வாங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவற்றில் சிங்கள மொழிப் பாடசாலைகள், தமிழ் மொழிப் பாடசாலைகள் என்றவகையில் வெவ்வேறாக அவற்றின் எண்ணிக்கையையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய பாடசாலை ஒன்றுக்கான நியமனங்களுக்கு அமைய, பாடசாலை கொண்டிருக்க வேண்டிய தளப்பரப்பு, மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(ii) மேலே (அ) (i) இல் உள்ள தேசியப் பாடசாலைகள் அவ்வாறான நியமனங்களுக்கு உட்பட்டவையா என்பதையும்;

(iii) அவ்வாறு இல்லையெனில், அப்பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக உள்வாங்கப்பட்டதற்கான அடிப்படை என்ன என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2023 ஒக்தோபர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

10/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய தரவுகளில் குறைபாடுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி தாக்குதல் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, குறித்த ஒவ்வொருவரினதும் பெயர் மற்றும் சேவை நிலையம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி நபர்களுக்கு அவர்களது சேவை நிறுவனங்களால் அரைச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

389/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி – மாத்தளை புகையிரதப் பாதையில், வத்தேகம புகையிரத நிலையத்துக்கு இருபக்கமாக வருகைதரும் புகையிரதங்கள் மாறுவதற்கான இருவழிப்பாதைகள் காணப்படாமையால் மேற்படி புகையிரத நிலையத்துக்கு வருகைதரும் புகையிரதங்களை அதிக நேரம் நிறுத்தி வைக்கவேண்டிய நிலைமை ஏற்படுவதன் காரணமாக பயணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் ஒருவழிப்பாதையாக மாத்திரம் காணப்படுகின்ற கண்டி – மாத்தளை புகையிரதப் பாதையை இருவழி புகையிரதப் பாதையாக அபிவிருத்தி செய்வதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அதற்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

422/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இலங்கைக்குத் திரும்பி மீண்டும் தொழிலுக்காக வெளிநாடு சென்ற இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கைக்குத் திரும்பியதன் பின்னர் வேலைவாய்ப்பை இழந்த மேற்படி தொழிலாளர்களுள் சிலருக்கு மீண்டும் வெளிநாடு செல்ல முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை இழந்த மேற்படி தொழிலாளர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேலைவாய்ப்புகளை நிறைவுசெய்து இலங்கைக்குத் திரும்பிய தொழிலாளர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக விசேட கருத்திட்டக் கடன் வழங்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

438/2023

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மோல்ட் அடங்கிய பல பால்மா வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும்;

(ii) இவற்றில் சில மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயன கலவைகளைக் கொண்டுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மோல்ட் அடங்கிய பால்மா உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இம்மூலப்பொருட்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படும் விகிதம் மற்றும் அளவுகள் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மோல்ட் அடங்கிய பால்மாவினைப் பயன்படுத்துவதால் மனித உடலுக்கு பாதிப்பு ஏற்படும் என்பது தொடர்பில் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர் அவ்வறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

693/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவின் காஞ்சிரங்குடா, பாவற்கொடிச்சேனை, பன்சேனை மற்றும் இலுப்படிச்சேனை போன்ற கிராமங்களுக்கு இதுவரை குடிநீர் வசதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) இதனால் அக்கிராமங்களில் வசிக்கும் மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களுக்கு குடிநீர் வசதியினை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி கிராமங்களுக்கு குடிநீர் வசதி வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3506/2023

கௌரவ கெவிந்து குமாரதுங்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்காக பேணிவரப்படுகின்ற சேமலாப நிதியத்தின் கணக்கு மீதிக்கென 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(ii) ஊழியர் சேமலாப நிதியத்தின் (E.P.F) கணக்கு மீதிக்கென 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(iii) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் (E.T.F) கணக்கு மீதிக்கென 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு நிதியங்களினதும் கணக்கு மீதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதங்களுக்கு இடையே வித்தியாசம் காணப்படுமாயின், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3515/2023

கௌரவ அசங்க நவரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இன்றளவில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதிக்கான பதவிகளில் இன்றளவில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறைகளைப் பெற்றுக் கொண்டுள்ள வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி காலப்பகுதியில் ஓய்வு பெற்றுள்ள வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3522/2023

கௌரவ உத்திக பிரேமரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் நிறுவப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) 1000 தேசியப் பாடசாலைகளை நிறுவும் வேலைத்திட்டம் இன்றளவிலும் செயற்படுத்தப்படுகின்றதா;

(iii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) அப்பரீட்சையை ஆரம்பித்ததன் நோக்கம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போதுள்ள கல்வி முறையில் மாற்றம் தேவை என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா;

(ii) ஆமெனில், அம்மாற்றங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3644/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தேர்தல் தொகுதி வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி மதுபான விற்பனை நிலையங்களில் அதிகமானவை பெருந்தோட்டங்களில் அல்லது அவற்றை அண்மித்ததாக நடாத்திச் செல்லப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறு நடாத்திச் செல்லப்படும் மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இம்மதுபான விற்பனை நிலையங்களில் பெரும்பாலானவை மத வழிபாட்டுத் தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு அருகாமையில் நடாத்திச் செல்லப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) மத வழிபாட்டுத் தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு அருகாமையில் மற்றும் பெருந்தோட்டங்களினுள் அல்லது அருகாமையில் மதுபான விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்வதால் பெருந்தோட்டங்களைச் சார்ந்ததாக வாழ்கின்ற மக்களுக்கு சமூக பாதிப்பு ஏற்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்தகைய மதுபான விற்பனை நிலையங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3663/2023

கௌரவ லலித் எல்லாவல,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரியவெவ, மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கப்பெற்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு நன்கொடையின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(ii) இல்லையெனில், குறித்த கட்டுமான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகள் வெளிநாட்டு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதன் இலங்கை முகவர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள அரசாங்க நிதியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெறப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு மைதானம் திறக்கப்பட்ட திகதி தொடக்கம் இது வரையில் அதன் வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.22/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் வழங்கும் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக நகர்ப்புற மற்றும் கிராமிய சமூகம் பெரும் நிலைகுலைவுக்கு உட்பட்டுள்ளமையினாலும், நுண்நிதி மற்றும் குத்தகை கடன் தொடர்பில் குறிப்பிட்ட நிறுவனங்களின் தூண்டுதல் காரணமாக கடன் பெற்றுக்கொண்டுள்ள ஏராளமான குடும்பங்கள் தற்போது கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளமையினாலும், அந்த நிறுவனங்களின் வட்டி வீதங்கள் பல்வேறு அளவுகளில் காணப்படுவதனாலும், குத்தகை கடன் தவணைகளைச் செலுத்தத் தவறும் நபர்கள் குறிப்பிட்ட நிறுவனங்களின் பல்வேறுபட்ட அழுத்தங்கள் மற்றும் வன்முறைகளுக்கு ஆளாவதனாலும், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் நிறுவனங் களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா. 24/2023

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார,— இலங்கையில் ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்கப்படுதல்,— ஒரே பாடசாலையில் பல ஆண்டுகளாக பணியாற்றுவதன் மூலம் உருவாகும் தனிப்பட்ட தொடர்புகளால் சில பிள்ளைகளுக்கு சிற்சில சந்தர்ப்பங்களில் அநீதிகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்தின் பல்வேறு படிநிலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுடன் பணியாற்றுவதன் மூலம் அவர்களின் மனநிலையை புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இழக்கப்படுவதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன கல்வி முறையொன்றைப் பேணிச் செல்வதில் இடையூறுகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்திலுள்ள உப கலாசாரங்களை புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் நழுவிச் செல்வதாலும், பல்வேறான பிரதேச மொழிகள் மற்றும் கலாசாரங்களிலிருந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளதாலும், கல்வியை வழங்குதல் மற்றும் நற் சமூக பிரஜைகளை உருவாக்குதல் எனும் ஒரே நோக்கம் நிறைவேறும் கல்வி முறையொன்றை உருவாக்குவதற்காக அனைத்து ஆசிரியர்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடல்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி வருடாந்தம் பெற்றோர்களிடமிருந்து தொடர்ச்சியாக அறவிடப்படுவதாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக சில பெற்றோர்களுக்கு மேற்படி நிதியினை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதால் அப் பெற்றோர்களின் பிள்ளைகள் வகுப்பறையில் அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புள்ளதாலும், பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினை எவ்வாறு திரட்ட வேண்டும் என்பது தொடர்பாகவும், மேற்படி நிதி தொடர்பான வரவு செலவு அறிக்கைகளை காட்சிப்படுத்த வேண்டிய விதம் தொடர்பாகவும், மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விதம் தொடர்பாகவும் பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா. 3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 8/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2023

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2023

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2023

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2023

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2023

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2023

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2023

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2023

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2023

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.25/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல்,— கடந்த காலத்தில் இலங்கையின் அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் அலுவலக உபகரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மர தளபாடங்கள் மிக நீண்டகாலம் உபயோகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது அந்த நிறுவனங்கள் பயன்படுத்தும் அலுவலக உபகரணங்கள் ஒட்டுப்பலகை மற்றும் ஏனைய செயற்கை தகடு வகைகள்கொண்டு தயாரிக்கப்படுவதால் அவை மிகக் குறுகிய காலத்தில் அழிவடைவதாலும், தற்போதைய இந்த அலுவலக உபகரணங்களைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் வெளிநாடுகளுக்கு அதிகளவில் பணம் சென்றடைவதாலும், இத்தகைய பொருட்கள் எமது சூழல் தொகுதிக்கு வெளியிடப்படுவதால் பாரிய தாக்கம் ஏற்படுவதாலும், அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாரம்பரிய உள்நாட்டு மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகளை மீண்டும் ஊக்குவித்தல்,— எமது நாட்டின் பாரம்பரிய மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகள் தற்போது பற்றாக்குறையாக இருப்பதால் வெளிநாடுகளில் இருந்து விதைகளை இறக்குமதி செய்வதற்கு பெருந்தொகையான பணம் செலவாகுவதாலும், அவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற விதைகளிலிருந்து கிடைக்கும் விளைச்சலில் இருந்து பெறப்படும் விதைகள் மீண்டும் முளைப்பதற்கான திறனை கொண்டிராத காரணத்தாலும், பாரம்பரிய உள்நாட்டு விதைகளிலிருந்து கிடைக்கும் விளைச்சல்கள் பூச்சிபீடைகளினால் ஏற்படும் பாதிப்பினை எதிர்கொள்ளும் சிறப்புத் திறனைக் கொண்டிருப்பதாலும், தற்போது இலங்கையில் அருகி வரும் பாரம்பரிய உள்நாட்டு மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகளை மீண்டும் ஊக்குவிப்பதற்கு ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— தொழில்வாண்மையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும்பொருட்டு தொழிற்பயிற்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் பல்வேறு தொழில்களில் ஈடுபடும் ஆட்களிடையே நிறுவனங்களிலிருந்து பயிற்சி பெற்றவர்களும் பிறப்பாற்றல் கொண்டு அத்தொழில்களில் ஈடுபடுபவர்களும் இருப்பதாலும், மேசன், மரவேலை, மோட்டார் பொறிவினைஞர், காய்ச்சியிணைத்தல், வண்ணந்தீட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களைப் பதிவு செய்வதற்கான ஒரு நிறுவனம் இல்லாமையால் ஒரே ஆள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதாலும், தொழில்வாண்மையாளர் ஒருவர் திடீர் விபத்தொன்றைச் சந்தித்துள்ள வேளையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதை எளிமையாக்குவதற்காக அந்த ஆளின் குருதி வகை பற்றிய தகவல்கள் மற்றும் சேவை பெறுநருக்கு தொழில்வாண்மையாளரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தகவல்கள் அடங்கிய தொழில் அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கான தேவைப்பாடு எழுந்துள்ளதாலும், தொழில்வாண்மையாளர்களைப் பதிவுசெய்து அவர்களுக்கு அடையாள அட்டையொன்றை வழங்குவதற்காக தொழில்பயிற்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுடன் இணைந்ததான நிறுவனம் ஒன்றைத் தாபிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் வழங்குதல்,— அரச சேவையில் இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஓர் இடத்தில் ஐந்தாண்டுகளுக்கு மேல் சேவையாற்றுகின்ற காரணத்தினால் அவர்கள் பெறக்கூடிய அனுபவம் மற்றும் சிறப்புத் தேர்ச்சி பற்றிய அறிவு குறைவடைவதாலும், அதிருப்தி மற்றும் மன அழுத்தம் குறைந்து உற்சாகமாகவும், ஆர்வமாகவும் புத்துணர்வுடனும் கடமையாற்றுவதற்கான வாய்ப்புகளை இழக்கின்றதாலும், ஏற்படக்கூடிய சமூக இடைத் தொடர்புகள் மூலம் முறைகேடுகள், ஊழல் மற்றும் மோசடிகளுக்கு தூண்டப்படக்கூடும் என்பதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன சேவையினைப் பேணுவதில் இடையூறுகள் ஏற்படக்கூடுமென்பதாலும், பிராந்திய நிருவாகத்தின் பல்வேறு அனுபவங்கள் அதிகரிக்கும் சாதகமான தாக்கம் குறைவடையுமென்பதாலும், வினைத்திறன்மிக்கதும் சிறந்ததுமான அரச சேவையினை நிறுவும் பொருட்டு இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை மாணவர்களை வாரத்தில் ஒரு நாள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்,— பல்வேறு விடயங்களின் காரணமாக பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமையினால் அவர்களது மன அழுத்தம் அதிகரித்துள்ளதாக சமூக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமையினாலும், விளையாட்டு, சங்கீதம், சித்திரம், நடனம் போன்ற அழகியல் செயற்பாடுகள் மற்றும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை போன்ற விவசாய செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்களின் உள மற்றும் உடல் வளர்ச்சி ஏற்படுவதாக உளவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளமையினாலும், தற்போதுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வாரத்தின் ஐந்து நாட்களில், வெள்ளிக்கிழமை போன்றதொரு தினத்தில் கட்டாய இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரதூரமான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கான சூழமைவினை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் துரிதமாக வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— அசுத்தமான உணவகங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளைத் தரப்படுத்துதல்,— சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற உணவக மற்றும் வெதுப்பக உற்பத்திகளின் தரம் மற்றும் தூய்மைத்தன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுவதனாலும், சில வெதுப்பக உற்பத்திகளின் அசுத்தம் காரணமாக நுகர்வோர் நோய்வாய்க்கு உட்படுவதற்கான அதிக வாய்ப்பு இருப்பதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கத் தலைவரே தெரிவித்திருப்பதனாலும், இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் தலையீட்டுடன் அசுத்தமான உணவகங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளை தரப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— இணையவழி ஊடாக தருவிக்கப்படுகின்ற பொருட்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— பாவனையாளர்கள் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை இணையவழி ஊடாக பெற்றுக்கொள்வதில் அதிகரித்த போக்கு இன்றளவில் உருவாகியுள்ளதனாலும், மேற்படி பொருட்களை நுகரும் போது பாவனையாளர்களுக்கு ஏற்படும் ஒவ்வாமைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்காண்பதற்கான இயலுமை காணப்படாமையினாலும், இதன் காரணமாக சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் மற்றும் பிரிவினைகள் ஏற்படுவதன் மூலம் மோதல்கள் உருவாக பெரும்பாலும் வாய்ப்புள்ளதனாலும், இணையவழி ஊடாக தருவிக்கப்படுகின்ற பொருட்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 37/2023

கௌரவ ஜகத் சமரவிக்ரம,— இலங்கையில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் பணியாட்டொகுதியினரின் பங்கேற்புடன் பயிர்ச்செய்கை வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— எமது நாட்டில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் பணியாட்டொகுதியினரின் பங்கேற்புடன் பழவகை, மரக்கறி மற்றும் கிழங்கு வகைகளை பயிரிடுவதன் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் என்பதனாலும், நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறைக்கு அது ஒரு தீர்வாக அமையும் என்பதனாலும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்டுள்ள அரச ஊழியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு கண்ணொருவ மற்றும் வேறு பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ள விவசாயப் பயிற்சி நிலையங்களின் ஊடாக விசேட பயிற்சியினை வழங்கி, நாடளாவிய ரீதியில் உணவுப் பயிர்கள் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல் மற்றும் மிகவும் வெற்றிகரமான பயிர்ச்செய்கைகளைத் தெரிவு செய்து தேசிய மட்டத்தில் பாராட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/2023

கௌரவ ஜகத் சமரவிக்ரம,— கறவைப் பசு வளர்ப்பினை வனப்பூங்காக்களில் மேற்கொள்ளல்,— இலங்கையில் திரவப் பால் மற்றும் பால் மா நுகர்வானது அதிகமாக காணப்படுவதாலும், கறவைப் பசுக்களுக்கு அவசியமான புல்லைப் பெற்றுக்கொள்ள இயலாத காரணத்தால் பாற் பண்ணையாளர்கள் ஊக்கமிழந்துள்ளதாலும், உள்நாட்டு பாலுற்பத்தி போதுமானதாக இல்லையென்பதால் பால்மா இறக்குமதிக்கு பெருந்தொகை பணம் செலவு செய்யப்படுவதாலும், சட்டவிரோதமாக வனப்பூங்காக்களில் கறவைப் பசுக்களை பட்டி அடைப்பதால் பாற்பண்ணையாளர்கள் கைது செய்யப்படுவதாலும், உண்மையான பாற்பண்ணையாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கென அடையாள அட்டை வழங்கி கறவைப் பசு வளர்ப்பினை வனப்பூங்காக்களில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— முருங்கைச் செய்கையை விஸ்தரித்தல்,— முருங்கை மற்றும் முருங்கைசார் உற்பத்திகளுக்கு பல உலக நாடுகளிலும், உள்ளூர் சந்தையிலும் அதிக கேள்வி நிலவுவதாலும், கிராமிய மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு முருங்கைச் செய்கை பேருதவியாக அமையும் என்பதாலும், இலங்கைக்கு அதனூடாக அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான இயலுமை உள்ளதாலும், முருங்கைச் செய்கையை விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2023

கௌரவ டீ. வீரசிங்க,— விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் பழவகைகளை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தல்,— இலங்கைக்கு பழவகைகளை இறக்குமதி செய்வதற்காக அதிகளவு நிதி செலவிடப்படுவதாலும், நாட்டில் எங்கும் விளையும் மூவகைப் பழங்களான அன்னாசி, பப்பாளி மற்றும் வாழைப்பழம் என்பன தற்போது இறக்குமதி செய்யப்படுவதாலும், பெரியவர்கள் மற்றும் பிள்ளைகளின் விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் இம்மூவகைப் பழங்களை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2023

கௌரவ டீ. வீரசிங்க,— உள்நாட்டு குரக்கன் உற்பத்தியை விஸ்தரித்தல்,— இலங்கையில் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்ட குரக்கன், பல்வேறு நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான இயலுமையைக் கொண்டதென ஊட்டச்சத்து நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாலும், தற்போது அதிகளவான குரக்கன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதால் அதற்காக பெருமளவு அந்நியச் செலாவணி செலவு செய்யப்படுவதாலும், உள்நாட்டு குரக்கனின் புதிய வகையினங்களை அடையாளங்கண்டு அவற்றை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்தி உள்நாட்டுக் குரக்கன் உற்பத்தியை விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2023

கௌரவ டீ. வீரசிங்க,— பல்வேறு திறன்களைக்கொண்ட மூத்த பிரசைகளை தேசிய பொருளாதாரத்தில் பங்குகொள்ளச்செய்தல்,— மூத்த பிரசைகளில் பெரும்பாலானவர்கள் பல்வேறு தொழில்சார் திறன்களைக் கொண்டவர்களாக இருப்பதாலும், சூழல் நேயம் மிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் இயலுமை மற்றும் அறிவு அவர்களிடம் காணப்படுகின்ற போதிலும் அது தொடர்பில் முறையான கற்றாராய்வு மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும், தேசிய பொருளாதாரத்திற்கு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பங்களிப்பை முனைப்புடன் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையொன்று காணப்படாமையாலும், முதியோர் இல்லங்களில் அல்லது தங்களது வீடுகளில் தனிமையில் வாழ்ந்துவரும் மேற்படி மூத்த பிரசைகளை அவர்களது தொழில்சார் திறன்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்து அவ்வுற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதனூடாக அவர்களுக்கான வருமான வழியொன்றை ஏற்படுத்துவதற்கும் மன ஒருமைப்பாட்டை பேணிச் செல்வதற்கு உதவியாக அமைவதற்கும் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

ப. 44/2023

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

ப. 45/2023

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2023

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட தேயிலைக் கைத்தொழில் முறைமைக்குப் பதிலாக தேயிலை சிறு தோட்ட முறைமையொன்றினை ஏற்படுத்துதல்,— இலங்கையின் தேயிலைப் பயிர்ச் செய்கையானது பெருந்தோட்டங்கள் மற்றும் தேயிலை சிறு தோட்டங்கள் ஆகிய இருவழி முறைகளைக் கொண்டமைந்திருப்பதனாலும், இதில் பெருந்தோட்ட முறைமையானது ஏற்கனவே வீழ்ச்சியடைந்து வருவதனாலும், பெருந்தோட்ட முறைமையில் மேற்கொள்ளப்படும் தேயிலை பயிர்ச் செய்கையினை சிறு தோட்ட முறைமையாக மாற்றியமைத்து குறித்த தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களை, சிறு தோட்ட உரிமையாளர்களாக்குவதன் மூலம் அவற்றினை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/2023

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 48/2023

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/2023

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/2023

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2023

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்டல்,— இலங்கையிலுள்ள குடும்ப அலகுகளில் 25% ஆனவை பெண் தலைமைத்துவ குடும்பங்களாக உள்ளதனாலும், அவற்றில் 50% ஆனோர் விதவைகளாக உள்ளதனாலும், இக் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களில் பால்நிலை காரணமாக எழும் சிக்கல்கள், காணி உரித்து பற்றிய சிக்கல்கள், வாழ்வாதார வழிமுறைகள் மட்டுப்படுத்தப்படுதல் காரணமாக எதிர்கொள்ளும் சிக்கல்கள் பிரதானமானவையாக உள்ளதனாலும், ஏற்கனவே வாழ்வாதார தொழிலொன்றில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு போதியளவு பயிற்சி மற்றும் வசதிகள் இல்லாமை, சந்தைப்படுத்தலில் காணப்படுகின்ற சிக்கல்கள், காணிகளின் பின்னுரித்தினைச் சாட்டும்போது ஆண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதன் காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள் போன்ற பல சிக்கலான நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ளதனாலும் மேற்படி சிக்கல் நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு நிலைபேறான திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2023

கௌரவ வேலு குமார்,— மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றைப் பிரகடனப்படுத்தல்,— இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனரென்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூரவேண்டுமென்பது இலங்கைவாழ் இந்தியா வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக இருப்பதாலும், 1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை சம்பள உயர்வு கோரி இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் “முல்லோயா கோவிந்தன்” என்ற தொழிலாளர் ஒருவர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப் போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொாழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பல தொழிற்சங்கப் போராட்டங்களில் மலையப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவுகூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2023

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 55/2023

கௌரவ சஜித் பிரேமதாச,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அலி சப்ரி ரஹீம் அவர்கள் பாராளுமன்றக் குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான தீர்மானம்,— புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அலி சப்ரி ரஹீம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத துர்நடத்தை தொடர்பில் விசாரிப்பதற்காக அவ்விடயம் தற்போது பாராளுமன்றத்தின் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாலும், குறிப்பிட்ட உறுப்பினர் பாராளுமன்றத்தின் குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்து செயற்படுவதானது பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை தொடர்பில் சிக்கல் தன்மையைத் தோற்றுவிப்பதாலும் மேற்படி விசாரணை முடிவுறும் வரை கௌரவ அலி சப்ரி ரஹீம் அவர்கள் பாராளுமன்ற குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்தலாகாதென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.